www.Padasalai.Net www.Trbtnpsc.Com

# KANCHIPURAM DT

**B**

# அரையாண்டுப் பொதுத் தேர்வு – 2023

## பன்னிரெண்டாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி | வரலாறு | மதிப்பெண்கள்:90

பகுதி - I

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக:– 20x1=20

1. "சுயராஜ்யம் எனது பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவேன்'' – எனக் கூறியவர்.
அ) பாலகங்காதர திலகர் ஆ) தாதாபாய் நௌரோஜி
இ) சுபாஷ் சந்திர போஸ் ஈ) பாரதியார்
2. சூரத்தில் நடைபெறவிருந்த காங்கிரஸ் மாநாட்டிற்கு காங்கிரஸின் அடுத்த தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு யாருடைய பெயர் தீவிர தேசியவாதிகளால் முன் மொழியப்பட்டது ?
அ) அரவிந்த கோஷ் ஆ) தாதாபாய் நௌரோஜி
இ) ஃபெரோஸ் ஷா மேத்தா ஈ) லாலா லஜபதிராய்
3. தென்னிந்தியாவில் தன்னாட்சி இயக்கம் யாரால் துவங்கப்பட்டது ?
அ) திலகர் ஆ) அன்னிபெசன்ட் இ) பி.பி. வாடியா ஈ) எச்.எஸ். ஆல்காட்
4. "Indian Unrest" என்ற புத்தகத்தின் ஆசிரியர்
அ) லாலா லஜபதிராய் ஆ) வேலண்டைன் சிரோல்
இ) திலகர் ஈ) அன்னிபெசன்ட்
5. பின்வரும் எந்த ஒன்று சரியாகப் பொருந்தவில்லை ?
அ) பஞ்சாப் துணை ஆளுநர் – 1. ரெஜினால்டு டையர்
ஆ) தலித் – பகுஜன் இயக்கம் – 2. டாக்டர் அம்பேத்கர்
இ) சுயமரியாதை இயக்கம் – 3. ஈ.வெ.ரா.பெரியார்
ஈ) சத்தியாகிரக சபை – 4. ரௌலட் சட்டம்
6. காந்தியடிகளின் தண்டி யாத்திரை பயணம் சென்றடைந்த ஆண்டு
அ) ஏப்ர 6, 1930 ஆ) மார்ச் 6, 1930 இ) ஏப்ரல் 4, 1939 ஈ)மார்ச் 4, 1930
7. பின்வருவனவற்றைப் பொருத்தி, சரியான விடையைத் தேர்வு செய்க.
அ) கான்பூர் சதி வழக்கு – 1. அடிப்படை உரிமைகள்
ஆ) மீரட் சதி வழக்கு – 2. சூரியா சென்
இ) சிட்டகாங் ஆயுதக்கிடங்கு கொள்கை – 3. 1929
ஈ) இந்திய தேசிய காங்கிரசின் கராச்சி மாநாடு – 4. 1924
அ) 1,2,3,4 ஆ) 2,3,4,1 இ) 3,4,1,2 ஈ) 4,3,2,1
8. கல்கத்தாவில் முதலாவது சணல் ஆலை தொடங்கப்பட்ட ஆண்டு
அ) 1855 ஆ) 1866 இ) 1877 ஈ) 1888
9. கூற்று : பிரட்டிஷ் அரசாங்கம் வகுப்பு வாதத்தை வளர்க்கவும் பரப்பவும் பின்பற்றியது தனித்தொகுதிக் கொள்கையாகும்.
காரணம் : மக்கள் இரண்டு தனித்தொகுதிகளாக பிரிக்கப்பட்டதால் வகுப்புவாத அடிப்படையிலேயே வாக்களித்தனர்.
அ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை
ஆ) கூற்று சரி, காரணம் தவறு
இ) கூற்று மற்றும் கார்ரணம் தவறு
ஈ) கூற்று சரி, காரணம் கூற்றை விளக்குகிறது
10. இந்திய தேசிய இராணுவம் எந்த நாட்டு உதவியுடன் நிறுவப்பட்டது ?
அ) ஜெர்மனி ஆ) ஜப்பான் இ) பிரான்ஸ் ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



11. பிரிட்டிஷார் எந்தக் காலத்திற்குள் இந்தியாவை விட்டு வெளியேற முடிவு செய்தனர்?
அ) ஆகஸ்ட் 15, 1947 ஆ) ஜனவரி 26, 1950
இ) ஜூன், 1948 ஈ) டிசம்பர், 1949

12. பின்வரும் நிகழ்வுகளின் சரியான வரிசையைத் தேர்வு செய்க
i) சீன மக்கள் குடியரசு
ii) சீனாவுடனான இந்தியப் போர்
iii) அரசமைப்பு நிர்ணயச் சபையின் கூட்டம்
iv) பஞ்சசீலக் கொள்கை
v) நேரு – லியாகத் அலிகான் ஒப்பந்தம்
கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து விடையினை தேர்ந்தெடுக்கவும்.
அ) i, ii, iii, iv, v ஆ) iii,i,v,iv, ii இ) iii,iv,i,v,ii ஈ) i, iii, iv,v, ii

13. இந்திய அரசாங்கம் ________ வகையான மேம்பாட்டிற்காக உறுதி பூண்டுள்ளது.
அ) முதலாளித்துவ ஆ) சமதர்ம
இ) தெய்வீக ஈ) தொழிற்சாலை

14. பூமிதான இயக்கத்தைத் தொடங்கியவர்
அ) ராம் மனோகர் லோகியா ஆ) ஜெய்ப்பிரகாஷ் நாராயணன்
இ) வினோபா பாவே ஈ) சுந்தர் லால் பகுகுணா

15. நவீன செயல்முறை அறிவியலின் தந்தை எனக் கருதப்படுபவர் யார்?
அ) அரிஸ்டாட்டில் ஆ) பிளாட்டோ
இ) ரோஜர் பேக்கன் ஈ) லாண்ட்ஸ்டெய்னர்

16. வட அமெரிக்காவில் முதன் முதலில் குடியேறிய ஐரோப்பியர்கள் ________
அ) போர்த்துக்கீசியர் ஆ) ஸ்பானியர் இ) டேனியர் ஈ) ஆங்கிலேயர்

17. இரண்டாம் சர்வதேசம் ________ நகரில் துவக்கப்பட்டது.
அ) பாரிஸ் ஆ) பெர்லின் இ) லண்டன் ஈ) ரோம்

18. அரசின் தடையற்ற (Laissez Faire) என்னும் பதத்தை உருவாக்கியவர் ________ ஆவார்.
அ) ஜான் A ஹாப்சன் ஆ) கார்ல் மார்க்ஸ் இ) ஃபிஷர் ஈ) கௌர்னே

19. அமெரிக்க ஐக்கிய நாட்டின் படைகளை ஆகஸ்ட் 1942 இல் பசிபிக் பகுதியில் தலையேற்று வழி நடத்தியவர் ________ ஆவார்.
அ) மெக் ஆர்தர் ஆ) ஐசன் ஹோவர்
இ) ஜெனரல் டி கால் ஈ) ஜார்ஜ் மார்ஷல்

20. 'பனிப்போர்' எனும் சொல்லை உருவாக்கியவர்
அ) பெர்னாட் ப்ரூச் ஆ) ஜார்ஜ் ஆர்வெல்
இ) ஜார்ஜ் கென்னன் ஈ) சர்ச்சில்

## பகுதி - II

**குறிப்பு: ஏதேனும் ஏழு வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி.**
**வினா எண் 30 –க்கு கண்டிப்பாக விடையளிக்கவும். 7x2=14**

21. தொடக்க கால முக்கிய தேசியவாதிகளைக் கண்டறிக.
22. அன்னிபெசன்ட் அம்மையாரால் வெளியிடப்பட்ட புத்தகம் மற்றும் வாராந்திரப் பத்திரிக்கைகளின் பெயர்களைக் கூறுக.
23. பி.ஆர். அம்பேத்கரால் வழி நடத்தப்பட்ட மஹத் சத்தியாகிரகம் பற்றி அறிவது என்ன?
24. தனித் தொகுதி முறையினை பற்றி எழுதுக.
25. இணைப்புறுதி ஆவணம் பற்றி நீவிர் அறிவது யாது?
26. சமதர்ம சமுக அமைப்பு என்பதைப் பற்றி நீவிர் அறிந்ததென்ன?
27. பிளாரன்ஸின் மெடிசி குடும்பம் பற்றி குறிப்பு வரைக.
28. தொழிற்புரட்சியின் சிறப்புக் கூறுகளை முன்னிலைப்படுத்திக் காட்டவும்.
29. மூன்றாவது ரெய்ச் என்றால் என்ன?
30. ஷீமன் திட்டம் என்றால் என்ன?

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



## பகுதி – III

குறிப்பு: ஏதேனும் ஏழு வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி. 7x3=21
வினா எண் 40 –க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.

31. காங்கிரஸ் இரண்டாகப் பிளவுப்படக் காரணமான சூரத் மாநாட்டின் செயல் முறைகள் குறித்து எழுதுக.
32. பூனா ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் யாது?
33. டாடா இரும்பு மற்றும் எஃகு நிறுவனம் (TISCO) பற்றி குறிப்பு எழுதுக.
34. எத்தகைய சூழ்நிலையில் காந்தியடிகள் வெள்ளையனே வெளியேறு இயக்கம் பற்றி சிந்தித்தார்?
35. இந்தியாவில் பசுமைப் புரட்சியின் விளைவுகள் யாவை?
36. வர்த்தக புரட்சியின் எதிர்மறை விளைவுகள் யாவை?
37. 'செப்டம்பர் படுகொலைகள்' எதனால் ஏற்பட்டது?
38. பிரான்ஸ் தும்மினால், ஐரோப்பாவிற்கு ஜலதோஷம் – தெளிவுபடுத்துக.
39. மிக ஆபத்தான U–படகுகள் மற்றும் Q–கப்பல்கள் பற்றி நீவிர் அறிவது என்ன?
40. சூயஸ் கால்வாய் சிக்கல் குறித்து சுருக்கமாக வரைக.

## பகுதி – IV

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7x5=35

41. அ) இந்திய தேசிய இயக்கத்தில் வ.உ.சிதம்பரத்தின் பங்கினைப் பற்றி எழுதுக.

(அல்லது)

ஆ) லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை முன்னிலைப்படுத்துக.

42. அ) இந்திய விடுதலைப் போரில் மகாத்மா காந்தியடிகளின் பங்கினை மதிப்பிடுக.

(அல்லது)

ஆ) பகத்சிங்கின் புரட்சிகர தேசியவாதம் மற்றும் புரட்சிகர நடவடிக்கைகள் எவ்வாறு அவரைத் தூக்கு மேடைக்கு இட்டுச் சென்றது?

43. அ) ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கை இந்திய தேசியத்தில் ஏற்படுத்திய தாக்கம் என்ன?

(அல்லது)

ஆ) வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போக்கினை விவாதிக்கவும்.

44. அ) இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடுகள் யாவை? அணிசேரா இயக்கத்தில் ஆப்பிரிக்க ஆசிய நாடுகளை இணைத்ததில் பிரதமர் நேரு அவர்களின் பங்கினை விளக்குக.

(அல்லது)

ஆ) ஊரக மறுசீரமைப்பு தொடர்பாக இந்திய அரசு பின்பற்றிய நடவடிக்கைகளை முன்னிலைப்படுத்துக.

45. அ) அமெரிக்க விடுதலைப் போருக்கான காரணங்கள், அதன் போக்கு, விளைவுகளை குறித்து விவாதிக்கவும்.

(அல்லது)

ஆ) வெர்செய்ல்ஸ் ஒப்பந்தம் ஜெர்மனியைப் பொறுத்தமட்டில் கடுமையானதாகவும், அவமானப்படுத்தக் கூடியதாகவும் தெரிந்தது.– இக்கூற்றினுக்கான ஆதாரப்பின்புலத்தை உறுதிப்படுத்துக.

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



46. அ) அணிசேரா இயக்கத்தின் இலக்குகளையும், நோக்கங்களையும் கோடிட்டுக் காட்டவும்.

(அல்லது)

ஆ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் பின்வரும் இடங்களை குறிக்கவும்.
1) அமிர்தசரஸ் 2) வாரணாசி 3) கேதா 4) பூனா 5) ஜீனாகத்

47. அ) ஒருங்கிணைந்த ஜெர்மனியின் உண்மையான வடிவமைப்பாளர் பிஸ்மார்க்கே என ஏன் சொல்லப்படுகிறது ?

(அல்லது)

ஆ) இரண்டாம் உலகப் போரின் போது நடைப்பெற்ற ஏதேனும் ஐந்து நிகழ்வுகளுக்கு காலக்கோடு வரைந்து காட்டுக.

***/***

www.Padasalai.Net

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com